ALPHA MIND POWER

# NEWSLETTER



**January 2017**

## *From Guruji's desk....*



My dear Alpha Siddha,

This letter comes to you with my blessings for a very Happy New Year. May the next year bring you everything that you desire.

2016 is over. We have seen many changes in this year. New Year is always a time to review the year that has passed and plan for the year that is beginning. In 2016 many lessons were learnt. Both happiness and sadness, joy and grief were experienced. You would have seen good health and disease as well. You would have witnessed birth and death too. The lesson that finally remains is that nothing is permanent. Everything keeps changing. Whether it is happiness or sadness, it simply keeps changing.

An even more powerful reminder is that life goes on, no matter what. The mind has the capacity to adapt. We only have to allow it to do so. As long as there is life, there is hope. And as long as there is a mind, there is mind power. So, let us cheer up and remind ourselves to use our mind power appropriately on a day to day basis.

Why should we remind ourselves? Because I keep meeting Alpha Siddhas who forget the power of their mind! Very often during classes an Alpha Siddha says, 'Guruji, my son is not studying. What should I do?' I only have to remind him to shower colors on the son and talk to his subconscious mind. Then the Siddha becomes happy and says, 'Oh, I did not do that. I will do it from today'. So, we do need reminders!

New Year is a time to count our blessings. And the first blessing is that we have understood the power of our subconscious mind and we also know how to use it. That is a blessing indeed! I see so many people who are unable to handle situations simply because they have not realised the power of their own mind. You have understood it. You have experienced it. You have to make use of it every minute of your life.

With Alpha you can create whatever you want in life. If you want to achieve your goals, Alpha helps you. If you wish to grow spiritually, Alpha shows you the way. Keep reminding yourself to meditate regularly and make use of all the techniques and meditations from our system. The best resolution for the New Year would be 'I MEDITATE REGULARLY'. And the rest will fall into place!

It is our responsibility to make life better for ourselves and our near and dear ones. Alpha meditation is the best tool to achieve this. Let us meditate to make India move on the right path to become a stronger nation. Let us meditate to make this world a better place for us and our next generations.

Wishing you a very happy New Year with a lot of Health, Wealth, happiness and Spiritual growth in 2017.
Blessings,

***Srimatha***

### *Rishikesh Yatra With Guruji*

***19.04.2017 to 01.05.2017***

**Program A** (3days) : Vashista gufa, Haridwar & Ganga Pooja/Aarthi

**Program B** (2 days) : Babaji Cave

**Program C** (5 days) : **"Shantagni"** – Reprogram your mind- Residential Retreat at Ashram

(10 days + 2 days travel + 1 day rest = Total 13 days)
You can attend all the programs or any combination.

**Eligibility**

**For Program A & B** : Level -1
**For Program C** : Level-3

For further enquiries please contact AMP office:
+919841272146

### குருஜியுடன் ரிஷிகேஷ் யாத்திரை

19.04.2017 முதல் 01.05.2017

**நிகழ்ச்சி A** (3 நாட்கள்) : வசிஷ்டர் குகை, ஹரித்துவார், கங்கா பூஜை/ஆர்த்தி

**நிகழ்ச்சி B** ( 2 நாட்கள்) : பாபாஜி குகை

**நிகழ்ச்சி C** ( 5 நாட்கள்) : சாந்தக்னி - மனதை தூய்மைபடுத்து - ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

10 நாட்கள் 2 நாட்கள் பயணம் 1 நாள் ஓய்வு மொத்தம் 13 நாட்கள்

3 நிகழ்ச்சிகள் அல்லது ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி**

**நிகழ்ச்சி A & B** : கட்டம் 1
**நிகழ்ச்சி C** : கட்டம் 3

விபரங்களுக்கு AMP அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

+919841272146

எனதருமை ஆல்ஃபா சித்தரே,

இக்கடிதம் எனது புத்தாண்டு வாழ்த்துக்களுடன் உங்களிடம் வந்து சேர்கிறது. இந்த புத்தாண்டு நீங்கள் விரும்பிய அனைத்தையும் உங்களுக்கு அளிக்கட்டும்.

2016 முடிந்து விட்டது. இந்த வருடத்தில் பல மாற்றங்களை பார்த்து விட்டோம். புது வருடம் பிறக்கும் நேரம் கடந்த வருடத்தை அசை போடவும் வருகின்ற வருடத்திற்கு நமது திட்டங்களை வகுக்கவும் தகுந்த நேரம். 2016 வருடத்தில் பல பாடங்கள் கிடைத்தன. சந்தோஷம், துக்கம், வருத்தம் என்று எல்லோருமே பார்த்திருப்பீர்கள். நல்ல ஆரோக்கியத்தையும் பார்த்திருப்பீர்கள். நோயின் கொடுமையையும் பார்த்திருப்பீர்கள். பிறப்பையும் பார்த்திருப்பீர்கள். இறப்பையும் பார்த்திருப்பீர்கள். கடைசியில் கிடைக்கும் பாடம் ஒன்று தான்... எதுவும் நிரந்தரம் இல்லை என்பது தான் அது. எல்லாமே மாறிக்கொண்டிருப்பது தான். சந்தோஷமோ துக்கமோ மாறிக் கொண்டே இருக்கிறது.

அதை விட நமக்கு கிடைக்கும் மிகப் பெரிய நினைவூட்டல்.... காலம் எதற்காகவும் நிற்பதில்லை. மாற்றங்களை பழகிக் கொள்ளும் திறமை மனதிற்கு உண்டு. நாம் அதை மாற விட வேண்டும். உயிர் இருக்கும் வரை நம்பிக்கை உண்டு. மனம் இருக்கும் வரை, மனதின் சக்தி உண்டு. அதனால் நாம் உற்சாகத்துடன் நமது மனதின் சக்தியை அன்றாட வாழ்வில் சமயத்திற்கு தக்கவாறு பயன்படுத்த நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

எதற்கு நினைவூட்டிக் கொள்ள வேண்டும்? காரணம் தனது மனதின் சக்தியை மறந்து விட்ட ஆல்ஃபா சித்தர்களை நான் அடிக்கடி சந்திக்கிறேன். ஆல்ஃபா சித்தர் ஒருவர் வகுப்பின் இடையே கேட்டார், “குருஜி, எனது மகன் சரியாக படிப்பதில்லை. நான் என்ன செய்யட்டும்?” அப்பொழுது நான் “அவனுக்கு நிறங்கள் செலுத்தி ஆழ் மனதுடன் பேசுங்கள்” என்று நினைவூட்டினேன்”. உடனே அந்த சித்தர் மகிழ்ச்சியுடன் “ஓ, அதை நான் செய்யவில்லை. இனி செய்கிறேன்” என்றார். ஆக, நமக்கு நினைவூட்டல் தேவை தான்.

புது வருடம் என்பது நமக்கு வாழ்வில் கிடைத்த நல்ல விஷயங்களை எண்ணிப் பார்க்க வேண்டிய நேரம். அதில் முதல் நல்ல விஷயம் நமக்கு ஆழ்மனதின் சக்தி புரிந்திருக்கிறது. அதை பயன்படுத்தும் வழிமுறைகளும் தெரிந்திருக்கிறது. அதுவே ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம் தான். தனது மனதின் சக்தியை புரிந்து கொள்ளாத காரணத்தினாலேயே சூழ்நிலைகளை சமாளிக்க தெரியாமல் பலர் திண்டாடுவதை பல முறை நான் கண்டிருக்கிறேன். நீங்கள் மனதின் சக்தியை புரிந்து கொண்டவர். அதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர். வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆல்ஃபா மூலம் வாழ்வில் நீங்கள் நினைத்ததை நிச்சயம் அடைய முடியும். உங்கள் இலட்சியங்களை அடைய நீங்கள் முயலும் பொழுது ஆல்ஃபா உங்களுக்கு உதவும். அதே சமயம் நீங்கள் ஆன்மீகத்தில் வளர நினைத்தாலும் ஆல்ஃபா உங்களுக்கு வழி காட்டும். தொடர்ந்து தியானம் செய்ய நினைவு படுத்திக் கொள்ளுங்கள். நமது தியானங்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். புது வருடத்திற்கான மிகப் பொருத்தமான நல்வாக்கியம் “நான் தவறாமல் தியானம் செய்கிறேன்” என்பது தான். அதை செய்து விட்டாலே மற்றவை எல்லாம் தானாகவே சரியான பாதையில் வந்து விடும்.

நம் வாழ்வையும் நம்மை சேர்ந்தவர்கள் வாழ்வையும் மேம்படுத்திக் கொள்வது நமது கடமை. அதற்கு மிக சிறந்த கருவி ஆல்ஃபா தான். நமது இந்திய நாடு சக்தி மிக்க நாடாக மாறுவதற்கு சரியான பாதையில் செல்கிறது என தியானம் செய்வோம். நமக்கும் நமது சந்ததியினருக்கும் இந்த உலகம் இன்னும் சிறப்பானதாக இருக்க நாம் தியானம் செய்வோம்.

வரும் புத்தாண்டு 2017 உங்களுக்கு ஆரோக்கியம், செல்வம், சந்தோஷம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியையும் தருவதாக இருக்க வாழ்த்துகிறேன்.
ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**



*Guruji with Alpha siddhas at Srividya Workshop in Goa*



*Guruji with Alpha siddhas at Siddha Kundalini Workshop in Chennai*

I realised the power of mantras only when Guruji asked us to chant Navakshari mantra. I attended the Mantra Shakthi class at Bengaluru. I started chanting all the mantras daily. I can actually feel all the negativities in my life slowly dissolving. My mind is also very peaceful now. I am very thankful to Guruji for showing us the power of Mantra chanting.

***Giridhar, Bengaluru.***




குருஜி நம்மை நவாக்ஷரி மந்திரம் சொல்ல சொன்னபோது தான் மந்திரங்களின் சக்தியை புரிந்து கொண்டேன். பெங்களூரில் மந்திர சக்தி வகுப்பில் கலந்து கொண்டேன். எல்லா மந்திரங்களையும் தினமும் சொல்லத் துவங்கினேன். உண்மையிலேயே வாழ்விலிருந்து பல தீய சக்திகள் கரைந்து போவதை என்னால் உணர முடிந்தது. என் மனமும் இப்பொழுது மிகவும் நிம்மதியாக இருக்கிறது. மந்திரங்களின் சக்தியை நமக்கு காண்பித்த குருஜிக்கு மிக்க நன்றி! **கிரிதர், பெங்களூர்.**

I had been chanting Lalitha Sahasranamam for many years and had always wanted to get a darshan of Devi. When I attended Srividya class I was not sure whether I would understand such a high level of meditation. But our Guruji has made it so simple and powerful that each and every one in the class could experience bliss and enjoy Dev's darshan. This class lifts us to a very high dimension. Devi Saranam. Guruve Saranam.

***Radha, Chennai.***

நான் பல வருடங்களாக லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லி வந்தேன். எப்படியேனும் தேவியின் தரிசனம் கிடைக்க வேண்டும் என வேண்டினேன். ஸ்ரீவித்யா வகுப்பில் கலந்து கொண்ட பொழுது இவ்வளவு பெரிய தியானத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா என்ற சந்தேகத்துடனேயே சென்றேன். ஆனால் நமது குருஜி அதை மிகவும் எளிதாக்கி எல்லோரும் அந்த ஆனந்தத்தை உணர்வது மட்டுமின்றி தேவியின் தரிசனமும் கிடைக்கும் படியாக செய்திருக்கிறார்கள். இந்த வகுப்பு நம்மை மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்று விடுகின்றது. தேவி சரணம். குருவே சரணம். **ராதா, சென்னை.**

I got the **Alpha Energy Box** from AMP office and kept it in my house. Whenever I measured the energy of my house with the pendulum it showed very positive energy. Once I showed this box to a Sadhu. He looked at it with amazement and said that this box will emit very highly positive energy atleast for the next 120 years! He asked me to keep it carefully in my pooja room. Our Guruji has given us such powerful tools. We have to understand the value and use them.

***Gayathri, Chennai.***

**ஆல்ஃபா சக்தி பெட்டியை** AMP அலுவலகத்திலிருந்து பெற்று எனது வீட்டில் வைத்திருந்தேன். பெண்டுலம் மூலம் அளந்து பார்த்த பொழுதெல்லாம் எனது வீட்டின் சக்தி மிகவும் நல்ல சக்தியாக இருப்பதைக் காண முடிந்தது. இந்த பெட்டியை ஒரு சித்தரிடம் காண்பித்தேன். அவர் ஆச்சரியத்துடன் அதை பார்த்து இந்த பெட்டி குறைந்தது அடுத்த 120 வருடங்களுக்கு மிக நல்ல சக்தியை கொடுக்கும். இதை கொண்டு சென்று உனது பூஜை அறையில் பத்திரமாக வைத்துக் கொள் என்று சொன்னார். குருஜி நமக்கு பல சக்தி வாய்ந்த கருவிகளை கொடுத்திருக்கிறார்கள். அதை புரிந்து கொண்டு நாம் அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**காயத்ரி, சென்னை.**

My daughter is six years old. Her classmate's mother died suddenly under abnormal circumstances. After hearing about this she became very disturbed. At times she used to become hysterical and hug me and cry that I should not die like her friend's mother. At a point it became very difficult for all the family members. We did not know how to console her. Finally I approached Guruji for music therapy. After just one session, my daughter became very calm. She has not spoken about this problem at all after the therapy. All of us in my family are greatly indebted to Guruji for this timely help. This problem could not have been solved in any other way. ***Sindhu, Chennai.***

என் மகளுக்கு ஆறு வயதாகிறது. அவளது வகுப்பு தோழியின் தாய் ஒரு அசம்பாவிதத்தில் திடீரென காலமானார். இதை கேள்விப் பட்டதும் அவள் மிகவும் பாதிக்கப் பட்டாள். சில சமயம் கட்டுபடுத்த முடியாமல் என்னை கட்டிப்பிடித்துக் கொண்டு என் தோழியின் தாய் போல் நீயும் இறந்து விடாதே என்று அழுவாள். ஒரு கட்டத்தில் குடும்பத்தில் இருந்த எல்லோருக்குமே இது மிகவும் தர்ம சங்கடமாகி விட்டது. அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்றே தெரியவில்லை. கடைசியில் குருஜியிடம் மியுசிக் தெரபி வேண்டும் என்று கேட்டேன். ஒரே ஒரு முறை அதை கேட்டதும் அவள் சமாதானமாகி விட்டாள். அதன் பிறகு அந்த அசம்பாவிதத்தை பற்றி அவள் பேசவே இல்லை. எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் தகுந்த நேரத்தில் கிடைத்த இந்த உதவிக்காக குருஜிக்கு நன்றி சொல்ல கடமை பட்டிருக்கிறோம். இந்த பிரச்சினையை வேறு எந்த வகையிலும் தீர்த்திருக்க முடியாது **சிந்து, சென்னை.**

I had attended level 1 in 2011. Somehow I had not been able to attend level 2. I thought I was quite content with level 1 practice. Finally I attended level 2 in December 2016. I realised what a mistake I had made by stopping with level 1. I wish I had attended this class earlier. Now, my first goal is to attend all the classes conducted by Guruji. Thanks Guruji for making life's lessons so simple. ***Dinesh, Bengaluru.***

நான் கட்டம் 1 வகுப்பு 2011ல் முடித்திருந்தேன். ஏனோ கட்டம் 2 என்னால் முடிக்க முடியாமல் இருந்தது. கட்டம் 1 மட்டுமே போதும் என்ற மன நிலையில் இருந்தேன். கடைசியில் டிசம்பர் 2016ல் கட்டம் 2ல் கலந்து கொண்டேன். கட்டம் ஒன்றுடன் நின்று விட்டது எவ்வளவு பெரிய தவறு என்பது அப்பொழுது தான் எனக்கு புரிந்தது. இந்த வகுப்பில் முன்னதாகவே கலந்து கொண்டிருக்கலாமே என்று தோன்றியது. இப்பொழுது எனது முதல் இலட்சியமே குருஜியின் அத்தனை வகுப்புகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்பது தான். வாழ்வின் பாடங்களை இவ்வளவு எளிதாக கற்றுக் கொடுக்கும் குருஜிக்கு நன்றி! **தினேஷ், பெங்களூர்**

*Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!*

**MAKKAL TV**

Saturdays, 9:00 AM

**POTHIGAI TV**

Mondays, 1:30 PM

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/

## Upcoming classes' schedule

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Trichy (Tamil) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi<br>Level – 1 | 05/01/17<br>06/01/17<br>07/01/17<br>08/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, Mc Donalds Road, Trichy |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 19/01/17<br>20/01/17<br>21/01/17<br>22/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi<br>Level – 1 | 26/01/17<br>27/01/17<br>28/01/17<br>29/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |
| Chennai (English) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi (Bilingual)<br>Level – 1 | 02/02/17<br>03/02/17<br>04/02/17<br>05/02/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*